# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ

16 Languages

Vol. XXXI YEAR OF OUR LORD JESUS CHRIST, 2026 AUGUST No. 08


## பரிசுத்த வேதாகமம்



இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### சங்கீதம் 136:1-10

1. கர்த்தரைத் துதியுங்கள்; அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது.
2. தேவாதி தேவனைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
3. கர்த்தாதி கர்த்தரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
4. ஒருவராய்ப் பெரிய அதிசயங்களைச் செய்கிறவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
5. வானங்களை ஞானமாய் உண்டாக்கினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
6. தண்ணீர்களுக்கு மேலே பூமியைப் பரப்பினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
7. பெரிய சுடர்களை உண்டாக்கினவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
8. பகலில் ஆளச் சூரியனைப் படைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
9. இரவில் ஆளச் சந்திரனையும், நட்சத்திரங்களையும் படைத்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.
10. எகிப்தியருடைய தலைச்சன்களைச் சங்கரித்தவரைத் துதியுங்கள்; அவர் கிருபை என்றுமுள்ளது.



## நீங்கள் கிறிஸ்து இயேசுவுக்கு ஒரு நல்ல போர்ச்சேவகராயிருக்கும்படி அழைக்கப்பட்டு இருக்கிறீர்கள்!

## You are called to be a good SOLDIER FOR CHRIST!

சகோதரி ஏஞ்சலின்



உயிர்த்தெழுந்து, ஆளுகை செய்து, விரைவில் வரவிருக்கும் இராஜாவாகிய நம் ஆண்டவரும், இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில் வாழ்த்துக்கள்.


நமது **அழைப்பின் எதிரொலி ஊழியங்களின்** நிறுவனர் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், ஊழியர்கள் மற்றும் உண்மையான ஆதரவாளர்கள் ஆகியோரின் சார்பாக, இந்த மகிழ்ச்சியான மற்றும் ஆசீர்வதிக்கப்பட்ட 80–வது சுதந்திர தினக் கொண்டாட்ட வேளையில், ஒவ்வொரு இந்தியருக்கும் எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நமக்கு அருளப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த சுதந்திரத்தை நாம் போற்றி மதிக்கவும், நமக்குள் ஒற்றுமைப் பிணைப்பை வலுப்படுத்தவும், நம் அன்பிற்குரிய தேசத்தின் ஒளிமயமான, அமைதியான மற்றும் நம்பிக்கையூட்டும் எதிர்காலத்திற்காக ஒன்றிணைந்து செயல்பட நம்மை ஊக்குவிக்கவும் உதவட்டும்.

நம் தேசத்தின் சுதந்திரத்தைக் கொண்டாடும்வேளையில், அதற்காகத் தங்கள் உயிரைத் தியாகம் செய்த வீரமிக்க தியாகிகளின் எண்ணற்ற தியாகங்களை நன்றியுணர்வுடன் நம் உள்ளங்கள் இயல்பாகவே நினைவுகூருகின்றன. அவர்களின் தைரியம், விடாமுயற்சி மற்றும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு ஆகியவைதான் நமது சுதந்திரம் கட்டியெழுப்பப்பட்ட அடித்தளமாக அமைந்தன. ஏறக்குறைய எண்பது வருடங்களுக்கு முன்பு

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....


அழைப்பின் எதிரொலி! கிறிஸ்தவ யூடியூப் சானல்!



போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின்

தினந்தோறும் 2 நிமிட தேவ செய்தி!

ஆங்கிலம், இந்தி மொழிகளில் – அதிகாலை 1.00 மணி முதல்

தமிழ், தெலுங்கு மொழிகளில் – அதிகாலை 2.00 மணி முதல்

மற்றும்

தமிழ் & ஆங்கில செய்திகளும், ஜெபமும்

ஞாயிறு – காலை 8.30 மணி மற்றும் மாலை 6.00 மணி

Subscribe பண்ணுங்கள் ! மேலும் Share பண்ணுங்கள் !!

ECHO OF HIS CALL - (Marching towards 60th year)
Estd. 1969



## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...

**கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்! – சங்கீதம் 119:1.**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

நமது ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் உன்னதமான நாமத்தில் உங்களை வாழ்த்துகிறோம்.

தேவ பிள்ளைகளாகிய உங்களுக்கு தேவன் நன்மையான காரியங்களைச் செய்வார். இது உங்கள் உரிமை. சர்வ வல்லவராகிய நம் தேவனை எல்லா சூழ்நிலைகளிலும் நம்பலாம். ஆயினும், கர்த்தருக்கு முன்பாக உண்மையாய் நடக்க நாம் கவனமாயிருக்க வேண்டும். **நான் கர்த்தருக்கு முன்பாக ஜீவனுள்ளோர் தேசத்திலே நடப்பேன்.** சங்கீதம் 116:9.

அடுத்த ஆண்டு முதல், **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகளின் ஒவ்வொரு பிரதிக்கும் தபால் கட்டணமாக ரூ. 2.00 (இரண்டு ரூபாய்) செலுத்த வேண்டியிருக்கும் என்பதை நாங்கள் அறிகிறோம். இது நமது பத்திரிகை ஊழியத்தின் மீது குறிப்பிடத்தக்க நிதிச்சுமையை ஏற்படுத்தும். எனவே, **அழைப்பின் எதிரொலி** போன்ற பதிவு செய்யப்பட்ட மாதாந்திர பத்திரிகைகளுக்கான தற்போதைய தபால் கட்டணத்தைத் தொடரும்படி, இந்தியாவின் மாண்புமிகு தகவல் தொடர்புத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு நம் இந்தியப் பிரதமர் ஆகியோருடைய இதயங்களை தேவன் ஏவ வேண்டும் என்று ஜெபிக்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறோம். தேவன் நமது மாண்புமிகு பிரதமரையும், அவரது குழுவினரையும் நல்ல ஆரோக்கியம், ஞானம் மற்றும் நீண்ட ஆயுளுடன் ஆசீர்வதிப்பாராக!

2026 ஜூலை 4, அன்று நடைபெற்ற நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின்** 26வது பட்டமளிப்பு விழாவை தேவன் தமது கிருபையால் அபரிமிதமாக ஆசீர்வதித்தார். 37



**நமது நெகேமியா வேதாகமக் கல்லூரிகளின் 26வது பட்டமளிப்பு விழா**

மாணவர்கள் பட்டம் பெற்று, தேவனுடைய மகிமையான ஊழியத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டனர். அவர்கள் இப்போது சுவிசேஷகர்களாகவும், போதகர்களாகவும் மற்றும் பல கிறிஸ்தவ ஊழியப் பணிகளிலும் ஈடுபடக் களப்பணியிடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

தேவமனிதரும், சிறந்த சுவிசேஷப் பிரசங்கியாரும், **அழைப்பின் எதிரொலி** மலையாளப் பத்திரிகையின் இணைஆசிரியருமான சுவிசேஷகர் பெஞ்சமின் மோசஸ் அவர்கள், தனது அன்பிற்குரிய மனைவி திருமதி பிரமிளா பெஞ்சமின் மற்றும் மகள் செல்வி மகிமா பெஞ்சமின் ஆகியோருடன் நமது தலைமை அலுவலகத்திற்கு வருகை தந்து, தங்கள் ஐக்கியத்தைப் பகிர்ந்து கொண்டார். அவர்களுக்காக நாங்கள் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.



### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.

HON. EDITOR-IN-CHIEF
Rev. Dr. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.
EX MANAGING EDITOR
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.
GENERAL MANAGER
Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM, MBA.
ADMINISTRATION
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)
EDITORIAL BOARD
Sis. Sajini Cherian
Rev. Dr. J. John Rajarathnam, B.E.S., B.D., M.Th.
Rev. Dr. K.R. Rajasekaran
Adv. N. Balaji, B.Com., M.L.

EDITOR, PUBLISHER & PRINTER
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293
Cell : (+91) 98410 71852, 98412 71858
E.MAIL
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in
WEBSITES
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.org
YOUTUBE CHANNEL
Echo of His Call

Our Ministries: ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) · BIBLECOR - Postal Courses (3 languages) · YouTube Ministry · Online Courses · Theological Correspondence Courses (2 languages) · Church Planting · Nehemiah Bible Colleges · Gospel Printing Press · Great Commission Partners · St. Paul's Matriculation School · Crusades · Community Development



**சுவிசேஷகர் பெஞ்சமின் மோசஸ், இணை ஆசிரியர் (மலையாளம்) மற்றும் குடும்பத்தினர்**

இந்தியா ஏறக்குறைய 150 கோடி (1.5 பில்லியன்) மக்கள் தொகையைக் கொண்ட ஒரு பெரிய ஜனநாயக நாடாகும். மக்கள் தொகையில் கிறிஸ்தவர்கள் சுமார் 2 சதவீதம் மட்டுமே உள்ளனர் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. எனவே, இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை இன்னும் அறியாதவர்களிடம் கொண்டு சேர்ப்பதில் நமக்கு மிகப்பெரிய பொறுப்பு உள்ளது.

இந்தச் செய்தியை வாசிக்கும்போது, கர்த்தர் உங்கள் இருதயத்தில் பேசி, இந்த **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தில் பங்கு கொள்ள உங்களை வழிநடத்தினால், அவருடைய வழிநடத்துதலின்படி உங்களால் இயன்ற வழிகளில் செயல்படுமாறு உங்களை வேண்டுகிறோம். தயவுசெய்து உங்கள் உள்ளூர் போதகர்களையும், ஊழியர்களையும் உங்கள் ஜெபங்களில் நினைவுகூருங்கள். கர்த்தர் உங்களுக்கு அளிக்கும் வசதிகளுக்கேற்ப அவர்களுக்கு ஆதரவளியுங்கள். எப்படியாகிலும், எல்லா மக்களுக்கும் தேவராஜ்யம் பிரசங்கிக்கப்பட வேண்டும் என்பதே எங்கள் நோக்கமாக இருக்கிறது. உங்களுக்காக நாங்கள் தொடர்ந்து ஜெபிக்கிறோம்; தேவன் உங்களைச் சிறப்பாக ஆசீர்வதிக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம்.

... **அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்.** மத்தேயு 9:37, 38.

தேவகிருபை உங்களோடு இருப்பதாக, ஆமென்!

**கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் சகோதரரான,**

**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்.**

மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

வாழ்ந்தவர்களின் தியாகமே, இன்று நாம் அனுபவிக்கும் சுதந்திரத்திற்கான விலைக்கிரயமாக அமைந்தது. அவர்களின் இரத்தமே நம் தேசத்தின் சுதந்திரம் மலர்வதற்கான விதையாக மாறியது.

இது எனக்கு இன்னும் ஒரு மகத்தான தியாகத்தை நினைவூட்டுகிறது. அது, 2,000 ஆண்டுகளுக்கு முன்பு கல்வாரி சிலுவையில் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து செய்த தியாகம். அவருடைய விலையேறப்பெற்ற இரத்தம் நமக்காக நித்தியமான சுதந்திரத்திற்கு விலைக்கிரயமானது. அதாவது, பாவம், நோய், அடிமைத்தனங்கள், ஆவிக்குரிய கட்டுகள் மற்றும் தலைமுறை சாபங்களிலிருந்து நமக்கு விடுதலை கிடைத்தது.

**அவர் நமக்காகச் சாபமானார்** (கலாத்தியர் 3:13). அவருடைய தியாகத்தின் மூலம், நாம் இருளிலிருந்து விடுவிக்கப்பட்டு அவருடைய ஆச்சரியமான ஒளிக்குள் கொண்டு வரப்பட்டுள்ளோம். **சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்** . . . என்று யோவான் 8:32–ல் இயேசு கிறிஸ்து அறிவித்தார்.

தேவனைத் துதியுங்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் நாம் உண்மையிலேயே விடுதலையடைந்திருக்கிறோம்.

*இயேசு கிறிஸ்துவும், புயலும்:*

மாற்கு நற்செய்தி 4– ஆம் அதிகாரத்தில், இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் ஒரு பயங்கரமான புயலை எதிர்கொண்ட போது, அவர் படகில் உறங்கிக் கொண்டிருந்த நிகழ்வை நாம் வாசிக்கிறோம். பயத்தினால் பிடிக்கப்பட்ட . . . **அவர்கள் அவரை எழுப்பி: போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா** . . . என்று கதறினார்கள். **அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப் பார்த்து: இரையாதே, அமைதலாயிரு என்றார்.** பின்னர் தம் சீடர்களின் அவிசுவாசத்தைக் குறித்து அவர்களைக் கடிந்து கொண்டார். படைப்பின் மீதே அவருக்கு இருந்த முழுமையான அதிகாரத்தைக் கண்டு அவர்கள் பிரமிப்படைந்தார்கள்.

*மாற்கு 4:36 இவ்வாறு கூறுகிறது:*

. . . **அவர் படவிலிருந்தபடியே அவரைக் கொண்டு போனார்கள்.** ...

இயேசு கிறிஸ்து தொடர்ந்து ஊழியம் செய்து வந்தார். அவர் உடல் ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும் மிகவும் களைப்படைந்திருந்தார்; கூட்டத்திலிருந்து விலகிச் சிறிது ஓய்வு எடுக்கவும், தம் சீடர்களுடன் அமைதியாக நேரத்தைச் செலவிடவும் அவருக்குத் தேவை இருந்தது.

அவர்கள் அவரை **'இருந்தபடியே'**, அதாவது களைப்புற்ற, சோர்வடைந்த மற்றும் உறக்கம் தேவைப்பட்ட நிலையில் அழைத்துச் சென்றார்கள். படகு பயணத்தைத் தொடங்கியவுடனேயே, இயேசு கிறிஸ்து உறங்கிவிட்டார்.

நம்மில் பலரால் இதை நன்கு புரிந்து கொள்ள முடியும். நீண்ட நாள் உழைப்பு, ஊழியம், பொறுப்புகள் அல்லது சேவைக்குப் பிறகு, அமைதியான ஓர் இடத்தைக் கண்டவுடன், களைப்பு நம்மை ஆட்கொண்டு விடுகிறது.

ஆயினும், இதே வசனத்தில் பெரும்பாலும் கவனிக்கப்படாத, ஆனால் ஆழமான ஆன்மீக வெளிப்பாட்டைக் கொண்ட ஒரு சிறிய முக்கியமான குறிப்பு உள்ளது: . . . **வேறே படவுகளும் அவரோடேகூட இருந்தது.**

மாற்கு மட்டுமே இந்தக் குறிப்பைப் பதிவு செய்துள்ளார். மாற்கு நற்செய்தியில் பல தெளிவான, நேரில் கண்ட சாட்சிகள் அடங்கியுள்ளன; மீனவரும், இயேசுவின் மிக நெருங்கிய சீடர்களில் ஒருவருமான பேதுருவின் தாக்கத்தால் இவை எழுதப்பட்டதாக நம்பப்படுகிறது.

மாற்கு பல குறிப்புகளைத் தனித்துவமாகப் பதிவு செய்துள்ளார்.

## மிக அவசர செய்தி!




நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகளை தபால் மூலம் அனுப்புவதில் சில தவிர்க்க முடியாத தடைகள் வெகு சீக்கிரத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்கள் பெயர்களையும், முகவரிகளையும், இ.மெயில் (மின்னஞ்சல்) முகவரிகளையும், வாட்ஸ்அப் எண்களையும் கடிதம் மூலமோ, இ.மெயில்(மின்னஞ்சல்) மூலமோ, தொலைபேசி மூலமோ, வாட்ஸ்அப் மூலமோ குறுஞ்செய்தி மூலமோ எங்களுக்கு உடனே அனுப்புங்கள்.

தொடர்ந்து உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்கு உதவுங்கள்!

எங்கள் முகவரி:

**ECHO OF HIS CALL,**
10, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005, India
Cell: (+91) 98412 71858 / 98410 71858 E.mail: sam@echoofhiscall.org

அவற்றுள் சில

- **இயேசு கிறிஸ்து தலையணை வைத்து உறங்கியது** (மாற்கு 4:38).
- **ஐயாயிரம் பேருக்கு உணவளித்தபோது இருந்த பச்சைப் புல்வெளி** (மாற்கு 6:39)
- **நூறு நூறு பேராகவும், ஐம்பது ஐம்பது பேராகவும் அமர்ந்திருந்த குழுக்கள்** (மாற்கு 6:40)
- **பார்வையற்ற ஒருவருக்கு இரண்டு கட்டங்களாக அளிக்கப்பட்ட சுகம்** (மாற்கு 8:22–25)

எனவே, . . . **வேறே படவுகளும் அவ ரோடேகூட இருந்தது** என்று எழுதும் போது, அது தேவையற்ற ஒரு குறிப்பு அல்ல. அது ஒரு வலிமையான ஆன்மீக உண்மையை வெளிப்படுத்துகிறது.

உங்கள் வாழ்க்கை உற்றுநோக்கப் படுகிறது. உங்கள் புயல்கள் கவனிக்கப் படுகின்றன. விடுதலையைப் பற்றிய உங்கள் சாட்சி, வேறொருவருக்கு விடுதலையைப் பெறுவதற்கான வழியாக அமையலாம். புயலின் நடுவே இயேசு கிறிஸ்துவைப் பின் தொடர்ந்த அந்தச் சிறிய படகுகளுக்காக நான் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

## அந்த சிறிய படகுகள் நமக்கு எதை நினைவூட்டுகின்றன?

### 1. உங்களைக் கவனித்துக் கொண்டி ருக்கும் சிறிய படகுகளால் நீங்கள் சூழப்பட்டிருக்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்!

தேவன் தம்முடைய புகழை அறிவிக்க நம்மை அழைத்திருக்கிறார்:

**நீங்களோ, உங்களை அந்தகாரத் தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியி னிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணி யங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.** 1 பேதுரு 2:9.

கிறிஸ்துவுக்குள் நாம் பெற்ற சுதந்திரம் நமக்காக மட்டுமல்ல, நம் வாழ்வின் வழியாக அவருடைய ஒளி பிரகாசித்து, மற்றவர்களை அவரிடம் வழிநடத்துவதற்காக வும் ஆகும்.

நாம் உணர்ந்தாலும், உணராவிட்டா லும் மக்கள் நம்மைக் கவனித்துக் கொண்டி ருக்கிறார்கள்; நம்முடைய விசுவாசம், மனப்பான்மை, வார்த்தைகள், செயல்கள், நெருக்கடியான சூழல்களில் நாம் காட்டும் எதிர்வினைகள் மற்றும் வாழ்க்கைப் புயல் களின்போது நாம் நடந்துகொள்ளும் விதம் ஆகியவற்றை அவர்கள் கவனிக்கிறார்கள்.

. . . **மனுஷர் உங்கள் நற்கிரியை களைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது** என்று மத்தேயு 5:16–ல் இயேசு கிறிஸ்து கூறுகிறார்.

வாழ்க்கைப் புயல்களின் மத்தி யிலும், நம்முடைய வாழ்க்கை தேவனுடைய நன்மையை வெளிப்படுத்துவதாகவும், மற்றவர்கள் பரலோகத்திலிருக்கிற நம் பிதாவை மகிமைப்படுத்தக் காரணமாக அமைவதாகவும் இருக்கட்டும்.

இயேசுவின் படகை அந்தச் சிறிய படகுகள் ஏன் பின்தொடர்ந்தன என்று எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை,

- சிலர் ஆர்வத்தினால் பின்தொடர்ந்தி ருக்கலாம்.
- சிலர் அவருடைய அற்புதச் செயல் களைக் கண்டு வியந்து பின்தொடர்ந்தி ருக்கலாம்.
- சிலர் உற்று நோக்கவும், குறை கூறவும் தொடர்ந்திருக்கலாம்.
- சிலர் இறைவார்த்தைக்காக ஏங்கிப் பின்தொடர்ந்திருக்கலாம்.
- சிலர் மீனவர்கள் அல்லது பயணிகள் போல சாதாரணமாக அருகிலேயே இருந்திருக்கலாம்.

காரணம் எதுவாக இருப்பினும், புயல் வீசியபோது சீடர்கள் எவ்வாறு செயல் பட்டார்கள் என்பதற்கு அவர்கள் சாட்சி களாக இருந்தார்கள்.

**நம்மைச் சுற்றியுள்ள அந்தச் சிறிய படகுகள் யார் ?**

- நம்முடைய பிள்ளைகள்
- நம்முடைய துணைவர் (கணவர் அல்லது மனைவி)
- நம்முடைய குடும்பத்தினர்
- நம்முடைய சக பணியாளர்கள்
- நம்முடைய அண்டை வீட்டார்
- நம்முடைய திருச்சபைக் குடும்பம்
- நம்முடைய சமூகம்

வாழ்க்கைப் பயணத்தில் நீங்கள் தனியாகச் செல்லவில்லை. உங்கள் பயணத்தை உற்றுநோக்கியவாறு, உங்களுக்கு அருகிலேயே பயணிக்கும் சிறிய படகுகளும் உள்ளன.

### 2. நீங்கள் இயேசு கிறிஸ்துவைச் சுமந்து செல்கிறீர்கள்; அவர்கள் சுமக்கவில்லை என்று நினைவில் கொள்ளுங்கள்.

சீடர்களின் படகுக்கும், அந்தச் சிறிய படகுகளுக்கும் இடையே இருந்த மிகப் பெரிய வித்தியாசம், புயல் அல்ல. அது, இயேசு கிறிஸ்துவின் பிரசன்னமே ஆகும்.

அந்தச் சிறிய படகுகளும், அதே புயலைத்தான் சந்தித்தன; ஆனால், அவற்றில் (அந்தப் படகுகளில்) இயேசு கிறிஸ்து இருக்கவில்லை.

இருப்பினும், நாம் செல்லும் இடமெல்லாம் இயேசு கிறிஸ்துவைச் சுமந்து செல்கிறோம். நாம் பரிசுத்த ஆவியின் ஆலயமாய் இருக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் பிரசன்னம் நம்மோடு இருக்கிறது.

ஆயினும், நம்மைச் சுற்றியுள்ள பலர் இன்னும் அவரை அறியாமலே வாழ்கிறார்கள்; அவர்கள் பயம், குழப்பம், நம்பிக்கையின்மை, ஆவிக்குரிய அடிமைத்தனம் மற்றும் பாவத் தின் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டுள்ள னர். இயேசு கிறிஸ்துவைச் சுமந்து செல்பவர் கள் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள், பேசுகி றார்கள் மற்றும் வாழ்கிறார்கள் என்பதை அவர்கள் உற்று நோக்கிக் கொண்டி ருக்கிறார்கள்.

**கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத் தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர் களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர் களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்க வும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்.** . . லூக்கா 4:18,19.

நீங்கள் விடுதலையின் தூதுவர். உங்களைச் சுற்றியுள்ள சிறிய படகுகளுக்குத்

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....

## வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| **Account Name** | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| **Account Number** | : 1023 2923 805 |
| **Bank Name** | : STATE BANK OF INDIA |
| **Branch** | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| **IFSC Code** | : SBIN 0000249 |
| **SWIFT Code** | : SBI NIN BB 455 |

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

ECHO OF HIS CALL MINISTRIES SINCE 1969

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (I தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் 2026 ஆகஸ்ட் 19 முதல் 2026 செப்டம்பர் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

ஆகஸ்ட் 19 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அச்சகப்பணி சம்பந்தமானவைகளை வெளியில் இருந்து தகுந்த நேரத்தில் செய்து கொடுக்கும் பணியாளர்களை ஆசீர்வதித்த கிருபைக்காக ...

ஆகஸ்ட் 20 ⇨ நமது **நெகேமியா வேதாகமக்கல்லூரியின்** ஆசிரியர்களையும், அவர்களின் குடும்பத்தினரையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

ஆகஸ்ட் 21 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** முதல்வர், பணியாளர்கள் மற்றும் மாணவர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

ஆகஸ்ட் 22 ⇨ ஆகஸ்ட் 10–ம் தேதியன்று 58–வது வருடத்திற்குள் அடியெடுத்து வைத்த பத்திரிகை ஊழியத்தினை ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

ஆகஸ்ட் 23 ⇨ நமது மிஷனரி ஊழியர்களின் பெரிதான அர்ப்பணிப்பிற்காக...

ஆகஸ்ட் 24 ⇨ நமது தலைமைப் போதகர் அவர்களையும், அவரது குடும்பத்தினரையும் எல்லாவித தீயசக்திகளிலிருந்தும் விலக்கிக் காத்துக் கொண்டதற்காக...

ஆகஸ்ட் 25 ⇨ நமது கடந்த மாதத்தேவைகளை தேவன் சந்தித்ததற்காக...

ஆகஸ்ட் 26 ⇨ நமது சபைகளுக்கு புது அங்கத்தினர்களை கொடுத்தற்காக...

ஆகஸ்ட் 27 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

ஆகஸ்ட் 28 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி**க்கு புதிய மாணவர் சேர்க்கைக்காக ...

ஆகஸ்ட் 29 ⇨ நமது அனைத்து பணியாளர்களையும், அவர்களின் குடும்பத்தினரையும் பாதுகாத்து வரும் கிருபைக்காக..

ஆகஸ்ட் 30 ⇨ தார்மீக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் எங்களுக்கு உதவி வரும் பங்காளர்களை ஆசீர்வ தித்து வருகிறதற்காக ...

ஆகஸ்ட் 31 ⇨ அர்ப்பணிப்புடன் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைக்கு ஆதரவளித்து வரும் இணை ஆசிரியர்களைக் கொண்ட நமது ஊழியத்தை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

செப்டம்பர் 01 ⇨ ஒருமித்த கருத்துடன் அர்ப்பணிப்புடன் பணி செய்யும் பணியாளர்களைக் கொடுத்த கிருபைக்காக...

செப்டம்பர் 02 ⇨ நமது தலைமைச் சபையில் நடைபெறும் வாலிபர் மற்றும் சிறுவர்களுக்கான அமைப்பை ஆசீர்வதித்து வரும் கிருபைக்காக ...

செப்டம்பர் 03 ⇨ களப்பணியிடங்களில் செயலாற்றும் நமது ஊழியர்களையும், அவர்களது குடும்பங்களையும் பாதுகாத்து வருவதற்காக...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

செப்டம்பர் 04 ⇨ இம்மாதத்திற்கான நம் பொருளாதாரத் தேவைகள் சந்திக்கப்பட வேண்டி...

செப்டம்பர் 05 ⇨ இந்த 2026–27–ம் கல்வி ஆண்டிற்கான நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரி** மாணவர்களை ஆசீர்வதிக்க வேண்டி...

செப்டம்பர் 06 ⇨ இந்த 2026–27–ம் கல்வி ஆண்டிற்கான நமது நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** மாணவர்களை ஆசீர்வதிக்க வேண்டி...

செப்டம்பர் 07 ⇨ நமது மாநில ஒருங்கிணைப்பாளர்களுக்காகவும் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்காகவும்...

செப்டம்பர் 08 ⇨ இந்தியாவில் சுவிசேஷம் செல்லாத இடங்களுக்கு சுவிசேஷம் சென்று ஜனங்கள் இரட்சிக்கப்பட...

செப்டம்பர் 09 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களின் வளர்ச்சிக்காக மற்றும் விரிவாக்கத்திற்காக...

செப்டம்பர் 10 ⇨ நமது அச்சக பணியாளர்கள், வாகன ஓட்டுனர்கள், கணினி ஆப்ரேட்டர்கள் போன்ற தொழில்நுட்ப பணியாளர்களுக்காக ...

செப்டம்பர் 11 ⇨ உலக பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக...

செப்டம்பர் 12 ⇨ மது அருந்தும் பழக்கம் உடையோர் மற்றும் தீயபழக்கம் கொண்டோர் மனந்திரும்ப...

செப்டம்பர் 13 ⇨ உலக தேசங்கள் அனைத்தும் ஒற்றுமையாகவும் மற்றும் அமைதியாகவும் வாழ்ந்திட...

செப்டம்பர் 14 ⇨ கிறிஸ்தவ போதகர்கள் கள்ள உபதேசம் செய்யாமல் வேதாகம முறைப்படி பிரசங்கிக்க ...

செப்டம்பர் 15 ⇨ எல்லா கிறிஸ்தவ ஸ்தாபனங்களின் ஆசீர்வாதங்களுக்காகவும் அவற்றின் பாதுகாப்பிற்காகவும் ...

செப்டம்பர் 16 ⇨ சிறைகளில் ஊழியம் செய்பவர்களுக்காக...

செப்டம்பர் 17 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்கள் நமது பன்மொழி ஊழியங்களில் புதிய தரிசனங்களுடன் செயல்படவும் ஆசீர்வதிக்கப்படவும் வேண்டி...

செப்டம்பர் 18 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய சக்திகளிலிருந்தும் தொடர்ந்து பாதுகாக்க ...

... 4–ம் பக்கத் தொடர்ச்சி

தேவனுடைய விடுதலையைக் கொண்டுசேர்க்கும் ஒரு ஊடகமாக நீங்கள் திகழவே தேவன் உங்களை விடுதலையாக்கியுள்ளார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

உங்கள் படகில் யார் இருக்கிறார், யார் இல்லை என்பதை ஒருபோதும் மறக்காதீர்கள்.

உங்கள் வாழ்க்கையே மக்கள் வாசித்துக் கொண்டிருக்கும் ஒரு நிருபமாகும்.

நீங்கள் என்ன செய்தியைப் பிரசங்கிக்கிறீர்கள் ?

## 3. புயல் ஒவ்வொரு படகையும் தாக்குகிறது என்று நினைவில் கொள்ளுங்கள்!

இயேசு கிறிஸ்துவைச் சுமந்து சென்ற படகை மட்டும் புயல் தாக்கவில்லை; அந்தக் கடலில் இருந்த ஒவ்வொரு படகையும் அது பாதித்தது.

விசுவாசிகளும், அவிசுவாசிகளும் புயல்களைச் சந்திக்கிறார்கள். நம் படகில் இயேசு கிறிஸ்து இருக்கிறார் என்பதற்காக நாம் ஒருபோதும் புயல்களைச் சந்திக்க மாட்டோம் என்று அர்த்தமல்ல; மாறாக, ஒவ்வொரு புயலையும் விட மேலான ஒரு இரட்சகர் நமக்கு இருக்கிறார் என்பதே அதன் பொருள்.

பின்வருவனவற்றின் மூலம் நமக்குப் புயல்கள் வரலாம்.

- உணர்ச்சிரீதியான போராட்டங்கள்
- நிதி நெருக்கடிகள்
- குடும்பச் சிக்கல்கள்
- சுகாதாரச் சவால்கள்
- ஆவிக்குரிய தாக்குதல்கள்

புயல்களைப் பயன்படுத்தி, நம்மைச் சுற்றியுள்ள மற்ற சிறிய படகுகளை மறந்து விட்டு, நமது சொந்த வேதனையில் மட்டுமே கவனம் செலுத்துமாறு எதிரி நம்மைத் தூண்டுகிறான். அவன் நம்மை

- கவலை மற்றும் உணர்வுரீதியான சுமைகள்
- குடும்பப் பொறுப்புகள்
- பொருளாதாரச் சிக்கல்கள்
- உடல் பலவீனம்
- ஆவிக்குரிய சோர்வு

ஆகியவற்றால் மூழ்கடிக்க விரும்புகிறான்.

நமது சொந்தப் போராட்டங்களிலேயே நாம் முழுமையாக மூழ்கியிருக்கும் போது, நம்முடைய ஜெபம், ஊக்கம், இரக்கம் மற்றும் சாட்சி ஆகியவை மற்றவர்களுக்கு தேவைப்படும். அப்போது அவர்களை நாம் கவனிக்கத் தவறி விடுகிறோம். ஆனால், புயலுக்கு மேலாக உயர்ந்து நிற்கும்படி தேவன் நம்மை அழைக்கிறார்.

**கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்.** ஏசாயா 40:31.

தாங்க முடியாத சுமைகளைச் சுமந்துகொண்டு, ஒரு தனிமையான பள்ளத்தாக்கின் வழியாக நடப்பதாகவும், புயலிலிருந்து தப்பிக்க விரும்புவதாகவும் நீங்கள் உணரலாம். ஆனாலும், உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவராகவே இருக்கிறார்.

இன்று நீங்கள் எதிர்கொள்ளும் புயல், உங்கள் பயணத்தைக் கவனித்துக் கொண்டிருக்கும் எண்ணற்ற சிறிய படகுகளுக்கு நம்பிக்கையையும் விடுதலையையும் தரும் ஒரு சாட்சியாக மாறக்கூடும்.

நீங்கள் இப்போது சந்திக்கும் அதே போராட்டத்தை, தேவன் மற்றவர்களுக்கு ஒருவேளை உங்களுக்குத் தெரியாதவர்களுக்குக்கூட, ஒரு ஆசீர்வாதமாக மாற்ற வல்லவர்.

**சோர்ந்து போகாதீர்கள்.**

இயேசு கிறிஸ்துவை உங்கள் படகில் கொண்டிருப்பதன் அர்த்தம் என்ன என்பதை அந்தச் சிறிய படகுகளுக்குக் காட்டுங்கள்.

## 4. புயலின்போது நீங்கள் காட்டும் எதிர்வினை மற்ற சிறிய படகுகளையும் பாதிக்கிறது.

சீஷர்கள் பதற்றமடைந்து **போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா** என்று கதறியபோது அவர்களைச் சுற்றியிருந்த சிறிய படகுகளும் நிச்சயம் அச்சத்தில் நிறைந்திருந்திருக்கக்கூடும்.

இயேசு கிறிஸ்து இருந்த படகே நடுங்கிக் கொண்டிருந்தால், மற்றவர்களுக்கு என்ன நம்பிக்கை இருந்திருக்கும் ?

நெருக்கடியான சூழலில் நீங்கள் காட்டும் எதிர்வினை, சுகமான காலங்களில் நீங்கள் பேசும் வார்த்தைகளைவிட அதிக வலிமையுடன் வெளிப்படுகிறது.

நம்பிக்கையற்றவர்களைப் போல நீங்கள் நடந்து கொள்கிறீர்களா ? அல்லது புயலின்போதும் உங்களுடன் இருப்பவரை வெளிப்படுத்துகிறீர்களா ?

எபிரெய வாலிபர்கள் மூவரும் இவ்வாறு அறிவித்தார்கள்:

**நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; ... விடுவிக்காமற்போனாலும்,...** . தானியேல் 3:17–18.

இது எவ்வளவு வலிமையான விசுவாசத்தின் வெளிப்பாடு!

சூழ்நிலைகளை மட்டுமே சார்ந்திருக்காத, அதே வேளையில் தூரத்திலிருந்து கவனிக்கும் ஒவ்வொரு சிறிய படகுக்கும் பலனளிக்கக்கூடிய அத்தகைய விசுவாசம் நம்மிடம் இருக்கிறதா ?

... **நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்** ... என்று 2 தீமோத்தேயு 1:12–ல் பவுல் கூறுகிறார்.

புயலின்போது நீங்கள் கொண்டிருந்த விசுவாசம் வேறொருவரின் பலனாக மாறக்கூடும்.

## 5. சிறிய படகுகள் உங்கள் விடுதலையைச் சார்ந்திருக்கின்றன என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இயேசு கிறிஸ்து புயலை அடக்கியபோது, அவரைச் சுற்றியிருந்த

தொடர்ச்சி 9–ம் பக்கம்.....

ECHO OF HIS CALL
நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்
Diploma in Theology &
Bachelor of Theology
சேப்பாக்கம் & சந்தோஷபுரம், வேளச்சேரி – சென்னை
போதனா மொழி : தமிழ் (பகுதி நேரம்) மாலை நேர வகுப்பு
போதனா மொழி : இந்தி (பகுதி நேரம்) மாலை நேர வகுப்பு
கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !
தொடர்புக்கு : தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org
உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 56 வருட அனுபவ ஸ்தாபனம்.

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்)
   தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ்.
3. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
4. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
5. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (சேப்பாக்கம், வேளச்சேரி & சந்தோஷபுரம்)
6. கிளைச்சபைகள் – (சந்தோஷபுரம், பாலாஜி நகர் & வேளச்சேரி)
7. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
8. பயிற்சி வகுப்புகள் – கருத்தரங்குகள்
9. சுவிசேஷக் கூட்டங்கள்
10. கைப்பிரதி வினியோகம் – தொடர் ஊழியம்
11. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
12. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி – கிராம ஆங்கிலப் பள்ளி
13. சிறுவர் வேத பாடசாலை (சேப்பாக்கம்) – ஞாயிறு காலை 10.30 மணி & (வேளச்சேரி, பாலாஜி நகர் & சந்தோஷபுரம்) மாலை 3.00 மணி
14. தன்னார்வலர் ஆராதனை – தினமும் காலை 5.30 மணி
15. ஆயத்தக் கூட்டம் – ஞாயிறு காலை 8.00 மணி
16. தமிழ் ஆராதனை – ஞாயிறு காலை 8.30 மணி
17. சிறுவர் பள்ளி – ஞாயிறு காலை 11.00 மணி
18. ஐக்கிய உணவு – ஞாயிறு மதியம் 11.30 மணி
19. முதுநிலை வாலிபர் கூட்டம் – ஞாயிறு மதியம் 12.30 மணி
20. மூப்பர் ஞாயிறு பள்ளி – ஞாயிறு மதியம் 1.30 மணி
21. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
22. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
23. ஆங்கிலம் – இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
24. கருத்து நேரம் – ஞாயிறு இரவு 7.00 மணி
25. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
26. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
27. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
28. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
29. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
30. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 6.00 மணி
31. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4.00 மணி
32. இரவு ஜெபம் – 3–ம் வெள்ளி இரவு 9.30 மணி
33. உபவாச ஜெபம் – இரண்டாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
34. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
35. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் – தினமும் இரவு 10.00 மணி (தொலைபேசி மூலம்)
36. பணியாளர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
37. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு

## I. வேதாகமத் தபால் கல்வி


தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

– ஆசிரியர்

## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின் அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி பத்திரிகையை

### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல்ல வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## நீங்கள் நூறத்தனையாய் அடைவீர்கள்! நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்ளுவீர்கள்!!

**செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோட செய்..** – பிரசங்கி 9:10

**காற்றைக் கவனிக்கிறவன் விதைக்க மாட்டான், மேகங்களை நோக்குகிறவன் அறுக்க மாட்டான்** – பிரசங்கி 11:4.

'ஜீவ ஒளி' என்ற தபால் வழி இறையியல் கல்வியின் மூலம் நான் எனது இளவயதில் ஆசீர்வதிக்கப்பட்டதால், வேதாகம தபால் வழிக் கல்வி மற்றும் வேதாகமக் கல்லூரி போன்றவைகளில் வேத புத்தகத்தின் ஆழமான சத்தியங்களைப் போதிக்க வேண்டும் என்பது எனது நீண்டகால ஆசையாக இருந்து வந்தது. இந்த பலமான ஆசை என் இருதயத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது. அது வேர் கொண்டு பல வருடங்களாக என் இருதயத்தினுள் வளர்ந்து ஜொலித்துக் கொண்டிருந்தது. ஆனால் எனக்கு அதற்கான எந்த வருமானமோ அல்லது என்னோடு இணைந்து செயல்பட்டு என்னை வழி நடத்தும் நபர்களோ கிடைக்கவில்லை. அக்காலங்களில் நானும் எனது குடும்பமும் வறுமையிலும், அதிக தேவைகளிலும் வாழ்ந்து வந்தோம். நாங்கள் வாழ்ந்து வந்த வாடகை வீடும் எந்த வசதியும் இல்லாதிருந்தது.



1980–ஆம் ஆண்டில் ஒருமுறை 'இந்திய வேதாகம இலக்கியம்' (India Bible Literature) என்ற ஸ்தாபனம் வெளியிட்ட ஒரு சுவிசேஷ புத்தகங்கள் அடங்கிய பார்சல் எனக்கு வந்தது. அதினுள் சில சுவிசேஷக் கைப்பிரதிகளும், தபால்வழிக் கல்வியின் ஒரு புத்தகமும் இருந்தது. நான் அதைப் படித்தபோது, அந்த தபால் வழிக் கல்வியின் புத்தகத்தை பல மொழிகளில் மொழி பெயர்த்து இந்திய மக்களனைவரும் பயனடைய உபயோகிக்கலாமே என்ற எண்ணம் எனக்குள் வந்தது. உடனேயே எனது பழைய சைக்கிளை எடுத்துக் கொண்டு, சென்னையில் 'ஆயிரம் விளக்கு' என்ற பகுதியில் செயல்பட்டு வந்த அந்த 'இந்திய வேதாகம இலக்கியம்' என்ற ஸ்தாபனத்திற்கு விரைந்து சென்றேன்.



அங்கு திரு. வேலு என்ற மறுபெயர் கொண்ட திரு. வேலாயுதம் என்ற இளம் வாலிபரைச் சந்தித்தேன். இப்பொழுது அவர் அதின் நிர்வாக இயக்குநராக உள்ளார். அவர் அப்புத்தகங்களையெல்லாம் சிறப்பாகவும், பொறுப்புடனும் ஒழுங்குபடுத்தி தபால் நிலையத்திற்கு அனுப்புவதைக் கவனித்தேன். அப்பொழுது நான் அவரோடு இணைந்து, அவரைப் போலவே அப்பணியினைச் செய்ய முடிவு எடுத்தேன்.

அவரை வியந்தபடி அவரை அணுகி, எனக்கு சில புத்தகங்களைக் கொடுக்க முடியுமா என்று கேட்டேன். அப்பொழுது அவர் ஒரு புத்தகத்தின் விலை 50 பைசா என்றார். அவரிடம் நான், "நான் அரசாங்கத்தில் குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்யும் ஏழைக் குடும்பத் தலைவன்", என்றேன். அதைக் கேட்டதும் அவர் 10 புத்தகங்களை இலவசமாகவே கொடுத்தார். ஆனால் அதிலும் நான் திருப்தியடையாமல் அங்கு இருப்பில் உள்ள மற்ற புத்தகங்களையும் கண்டேன்.

அப்பொழுது அங்குள்ள சில புத்தகங்கள் என்னை 'சாம்' என்று பெயர் சொல்லி அழைப்பது போலவும், அவை என்னிடம், "எங்களை உன்னுடன் எடுத்துச் சென்று உனக்குத் தெரிந்த யாருக்காவது கொடு. எங்களுக்குள் அதிக வல்லமை உள்ளது!" என்று கூறுவது போலவும் இருந்தது. என்னால் அவ்விடத்தைவிட்டு வெளியே வர முடியவில்லை. அப்பொழுது வேறொரு சகோதரன் வந்து, "நீ யார் ? ஏன் இங்கேயே நின்று கொண்டு உள்ளே பார்த்துக் கொண்டு இருக்கிறாய் ?" என்று கேட்டார். நான், "மெய் தேவனாகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய மிகவும் வாஞ்சையாயுள்ள ஒரு ஏழை மனிதன். இந்த புத்தகங்களை வாங்க வந்தேன்," என்றேன். அவர் "அப்படியானால் பணம் கொண்டு வந்து வாங்கிக் கொள்," என்றார். எனவே எனக்கிருந்த ஒரே சொத்தான சைக்கிளை விலைக்கு விற்க முடிவு செய்தேன்.



உடனே நான் அருகிலிருந்த ஒரு சைக்கிள் பழுது பார்க்கும் ஒரு கடைக்குச் சென்று ரூ.100/–க்கு என் சைக்கிளை விற்று 200 புத்தகங்களை வாங்கினேன். எனக்கிருந்த ஒரே சைக்கிளை விற்றுவிட்டதால் அப்புத்தகங்களை என் தோளிலும் தலையிலுமாகச் சுமந்து, 'ஆயிரம் விளக்கு' என்ற பகுதியிலிருந்து 5 கிலோ மீட்டர் நடந்து என் வீட்டிற்கு வந்தேன்.

அத்தகைய கனமான சுமையை நான் சுமந்து பழக்கமில்லாததால், நான் மிகவும் களைப்பாயிருந்தேன். இரண்டு முறை வழியில் அந்த புத்தகங்கள் கட்டவிழ்ந்து என் தலையிலிருந்து கீழே சாலையில் சிதறி விழுந்தன. சிலர் என்னைப் பார்த்து ஏளனமாய்ச் சிரித்ததைக் கேட்டேன். நான் இறுதியாக என் வீட்டிற்கு வந்து அப்புத்தகத்தை என் முழு பெலத்தோடும் உபயோகிக்கத் தொடங்கினேன்.



பின்பு, (கர்த்தருக்குள் நித்திரையடைந்த) சகோ. M. பால்ராஜ் அவர்களுடன், 'புது வாழ்வு உமக்கு' என்ற வேத பாடத்தை

**அழைப்பின் எதிரொலி** மாலை நேர கல்லூரிகளில் தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில் ஆரம்பிக்க தேவன் உதவி செய்தார். அதைத் தொடர்ந்து புத்தகங்களை அச்சிட ஒரு அச்சகத்தையும், மூன்று மாலைநேர வேதாகமக் கல்லூரிகளையும் ஆரம்பித்து நடத்த தேவன் உதவினார்.



ஆம், என் அருமை நண்பரே, ஒரு நாள், தேவனுடைய ராஜ்யத்திற்காக என்னுடைய பழைய சைக்கிளை இழக்க நேர்ந்தது; என்னுடைய குடும்பத்தார் மற்றும் நண்பர்களின் கண்களுக்கு அது ஒரு நிந்தைக்குரிய, அறிவில்லாத செயலாகத் தென்பட்டது; ஆனால் இன்றோ தேவன் எனக்கு பல வாகனங்களையும், எனக்கு உதவி செய்ய திறமை வாய்ந்த மக்களையும் தேவன் தந்திருக்கிறார்.

ஒரு காலத்தில், சுவிசேஷ புத்தகங்களை என் தோள்களிலும் தலையிலுமாக நான் சுமக்க வேண்டி வந்தது. எனது வாலிப பருவத்தில் அச்செயல் எனக்கே வேதனைக்குரியதாகவும் வெட்கப்படக் கூடியதுமாயிருந்தது; ஆனால் இன்றோ தேவன் எனக்கு சுவிசேஷ இலக்கிய புத்தகங்களையும், பணியாளர்களையும், பல இடங்களுக்குக் கொண்டு செல்ல பல வாகனங்களையும் தந்துள்ளார்.

அன்பு நண்பரே, உங்களுக்கும் உங்கள் எதிர்காலத்துக்கும் தேவன் ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். இன்றே கர்த்தருக்காகப் பாடுபட முன் வாருங்கள். இயேசுகிறிஸ்துவையே நீங்கள் பின்பற்றக்கூடிய தெய்வமாகத் தெரிந்துகொள்ளுங்கள். தேவ ராஜ்யத்தை மனதில் வைத்து, தேவ பணிக்காக உங்களுக்கு மிகவும் முக்கியமாகத் தோன்றுகிறதை முதலீடு செய்யுங்கள். உங்கள் வாழ்வில் தேவன் அருளும் ஆசீர்வாதங்களுக்கு அளவே இருக்காது.

**ஒரே ஒரு வாழ்வு! அதுவும் சீக்கிரமாய்க் கடந்து போகும்!!**
**கர்த்தருக்காகச் செய்வது மட்டுமே நிலைநிற்கும்!!!**

******************

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

ஒவ்வொரு சிறிய படகும், அவருடைய வல்லமையின் தாக்கத்தை உணர்ந்தன. அந்த அற்புதம் சீடர்களுக்கு மட்டுமல்ல; அது அருகிலிருந்த ஒவ்வொரு படகுக்கும் அமைதியை அளித்தது.

அன்பு சகோதர, சகோதரிகளே! சில சமயங்களில் தேவன் நம்மைச் சிரமங்கள், புயல்கள், சோதனைகள் மற்றும் எதிர்பாராத காலக்கட்டங்கள் வழியாகச் செல்ல அனுமதிக்கிறார். ஏனெனில், நம்முடைய விடுதலையைப் பயன்படுத்தி மற்றவர்களுக்கு நம்பிக்கையூட்ட அவர் விரும்புகிறார்.

உங்கள் வாழ்வில் ஏற்படும் அந்த விடுதலையும், முன்னேற்றமும் வேறொருவருக்கு ஆசீர்வாதமாக அமையலாம்.

உங்கள் ஜெயம் மற்றொருவருக்கான வாய்ப்புக் கதவுகளைத் திறக்கலாம்.

உங்கள் விடாமுயற்சி, அமைதியாகப் போராடிக் கொண்டிருக்கும் ஒருவரைப் பலப்படுத்தலாம்.

சில நேரங்களில், நம்முடைய சாட்சியானது மற்றொருவர் விடுதலை பெறுவதற்கான வழியாக அமைய வேண்டும் என்பதற்காகவே தேவன் நம்மைப் புயல்களின் வழியாகச் செல்ல அனுமதிக்கிறார்.

பவுலையும், சீலாவையும் நினைவு கூருங்கள். அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுச் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தபோதும், அவர்கள் சோர்ந்துபோய் முடங்கிவிடவில்லை. மாறாக, அவர்கள் தங்கள் சத்தத்தை உயர்த்தி தேவனை ஆராதித்தார்கள்.

வேதாகமம் கூறுகிறது:

**நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.** அப்போஸ்தலர் 16:25.

பயம், பொய், எதிரியின் சூழ்ச்சிகளால் சிக்கியிருக்கும் உங்களைச் சுற்றியுள்ளவர்கள், நீங்கள் உங்கள் புயல்களைக் கடந்து செல்லும்போது அதைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் எதைக் கேட்கிறார்கள்?

அவர்கள் துதி, விசுவாசம் மற்றும் வெற்றியின் சத்தத்தைக் கேட்கிறார்களா?

அல்லது பயம், முணுமுணுப்பு மற்றும் சோர்வின் சத்தத்தைக் கேட்கிறார்களா?

அப்போது,

**சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது; உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது; எல்லாருடைய கட்டுகளும் கழன்று போயிற்று.** அப்போஸ்தலர் 16:26.

எனக்கு அருமையான சகோதர, சகோதரிகளே! '**எல்லாருடைய**' என்ற வார்த்தையைக் கவனியுங்கள்.

பவுலும் சீலாவும் மட்டுமல்ல, எல்லாரும் விடுதலைப் பெற்றார்கள்.

அவர்களுக்கு அருகில் இருந்த கைதிகள்; அவர்கள் தெரிந்தவர்களோ அல்லது தெரியாதவர்களோ; விடுதலைப் பெற்றார்கள். ஏனெனில், தேவனுடைய ஊழியர்கள் இருவர் துன்பத்தின் மத்தியிலும் ஆராதனையைத் தேர்ந்தெடுத்தார்கள்.

அதுவே, தேவனுடைய கிருபையின் வல்லமை.

நீங்கள் மீண்டும் ஒருபோதும் பார்க்காத கட்டுகளைக் கூடத் திறக்கும் திறவுகோலாக உங்கள் ஆராதனை அமையட்டும்.

## அனைவருக்கும் விடுதலை!

இயேசு கிறிஸ்து நமக்குத் தரும் விடுதலையைப் பிறருக்கு கொண்டு சேர்க்கும் கருவிகளாகச் செயல்பட அவர் நம் ஒவ்வொருவரையும் அழைத்துள்ளார். குறிப்பாக, எதிரியின் சூழ்ச்சிகளான ஏமாற்றம், பயம் மற்றும் இருள் ஆகியவற்றால் கட்டுண்டிருப்பவர்களைச் சென்றடைய அவர் நம்மை அழைக்கிறார்.

நம்மைச் சுற்றிலும் அந்தச் சிறிய படகுகள் உள்ளன;

அவை நம்பிக்கையைத் தேடிக் கொண்டிருக்கின்றன;

அவை சமாதானத்துக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றன;

அவை இயேசு கிறிஸ்துவின் யதார்த்தத்தைக் காணக் காத்திருக்கின்றன.

அவர்கள் சந்திக்கும் இயேசு கிறிஸ்துவின் பிரதிபலிப்பாக நீங்களும், நானும் இருக்க வேண்டும்.

இயேசு கிறிஸ்துவை உங்கள் படகில் மட்டும் வைத்துக் கொண்டு திருப்தியடையாதீர்கள்; உங்களைச் சுற்றியுள்ள அந்தச் சிறிய படகுகளுக்கும் அவர் தேவைப்படுகிறார்.

நம்மைச் சுற்றிலும் உள்ள லட்சக் கணக்கான மக்களுக்கு, அவர்களில் பலரை நாம் நித்திய வாழ்வு வரை ஒருபோதும் சந்திக்காமலே போகலாம்; அவருடைய விடுதலையைக் கொண்டு செல்லும் ஆற்றலைத் தேவன் நமக்குத் தந்தருள்வாராக. இயேசு கிறிஸ்துவின் பிரசன்னம் இல்லாமலே அந்தச் சிறிய படகுகளில் பயணம் செய்து கொண்டிருப்பவர்களுக்காக, உண்மையான 'விடுதலைப் போராளிகளாகத்' திகழ தேவன் நம்மை அழைத்துள்ளார்.

*அந்தச் சிறிய படகுகளை நினைவில் கொள்ளுங்கள்!*

*************

### அறிவிப்பு

*(+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய போதகரின் பிரதான இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.* – ஆசிரியர்

Posted at "Egmore RMS Patrika Channel" RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## OUR BANK DETAILS:

### 1. Bank : State Bank of India

Branch : Triplicane, Chennai-5
Name : S. Sam Selva Raj
A/C No. : 1023 2934 679
IFSC : SBIN 00 00 249
SWIFT CODE : SBI NIN BB 455

### 2. Bank : ICICI Bank

Branch : Anna Salai, Chennai-6
Name : Echo of His Call
A/C No. : 6038 0502 2319
IFSC : ICIC 000 6038

### 3. Bank : State Bank of India

(This Account is for Tax Exemption for Indians only )

Branch : Triplicane, Chennai-5
Name : Echo of His Call Educational Trust
A/C No. : 1023 2923 805
IFSC : SBIN 00 00 249

## OUR QR CODE:

ECHO OF HIS CALL

Google Pay: 98410 71858
PayPal : SAM SELVA RAJ

*****

E.mail : sam@echoofhiscall.org

# அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

☆ வருட சந்தா ரூ. 100/– ☆ ஆயுள் சந்தா ரூ. 2000/–

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

## YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS Patrika Channel"**
**on 28th JULY 2026**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**